முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.20/2022

நாள். 09.02.2026 வா.சா.1 – திரு. மீரான் முகைதீன்

த/பெ - திரு. முகம்மது பாரூக்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) உங்கள் சொந்த ஊர் துலுக்கர் பட்டி என்றால் சரி தான். நான் மருத்துவ பிரதிநிதியாக திருநெல்வேலி மாவட்டத்தில் பணி புரிந்து வருகிறேன். எந்த கம்பெனி என்றால் Cluster Life Science என்ற நிறுவனத்தில் 2016 ஆம் ஆண்டு முதல் பணிபுரிந்து வருகிறேன். நான் B.Com., படித்துள்ளேன். உங்கள் தகப்பனார் பெயர் முகம்மது பாரூக், எனது தாயார் ஜமீலா பீவி என்றால் சரி தான். உங்களுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 3 ஆண் குழந்தைகளும் 1 பெண் குழந்தையும் ஆவார்கள். பெண் குழந்தையின் பெயர் குரைசியா பேகம், ஆண் குழந்தைகள் ஷேக் ஜிந்தா மதார், நான் மீரான் முகைதீன், ஜாகீர் உசைன் ஆகியோர்கள் ஆவார்கள்.

2) உங்களை தவிர மற்ற இரு ஆண் மக்களும் எங்கு உள்ளார்கள் என்றால் ஒருவர் துலுக்கர்பட்டியிலும் மற்றொருவர் வள்ளியூரிலும் உள்ளார். ஜாகீர் உசைன் என்பவர் உங்கள் பெரியப்பா வீட்டில் குடியிருந்து வருகிறார் என்றால் சரி தான். வழக்கு சொத்தின்சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். பழைய சர்வே எண். 405/2 எ 1 எ, புதிய சர்வே எண். 736/29 ஆகும். உங்கள் கட்சிப்படி மேற்படி சொத்து நாகூர் மைதீன்

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.02.09 19:39:58 +0530

மற்றும் அவரது வாரிசுகளுக்குபாத்தியப்பட்டதாக பிராது மற்றும் முதல் விசாரணையில் கூறி உள்ளீர்கள் என்றால் சரி தான்.

3) நாகூர் மைதீனுக்கு எத்தனை வாரிசுகள் என்று தெரியுமா என்றால் 3 ஆண் மக்களும், 3 பெண் மக்களும் வாரிசுகள் ஆவார்கள். சாகுல் ஹமீது, மீரான் மைதீன், சிராஜுதீன் என 3 ஆண் மக்களும், ஆயிஷா பீவி, முகம்மது இப்ராஹிம் அம்மாள், மைதீன் மீரா ஆம்மாள் என 3 பெண் மக்களும் ஆவார்கள். நாகூர் மைதீன் எப்போது இறந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நாகூர் மைதீன் என்பவருக்கு மேலே கண்ட 6 நபர்கள் வாரிசுகள் என காட்டுவதற்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான்.

4) வழக்கு சொத்து நாகூர் மைதீன் மற்றும் அவரது வாரிசுகளான 6 நபர்கள் பெயரில் இருப்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். சிராஜுதீன் பெயரில் பத்திரம் உள்ளதாக சாட்சி கூறுகிறார். சிராஜுதீன் பெயரில் பத்திரம் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. பதிவு செய்யப்படாத பத்திரம் உள்ளது. சிராஜுதீன் பெயரில் பதிவு செய்யப்படாத ஆவணம் இருப்பதாக நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரி தான்.

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.02.09 19:40:04 +0530

5) முதல் விசாரணை வாக்குமூலம் மற்றும் பிராதில் சிராஜுதீன் பெயரில் பதிவு செய்யப்படாத ஆவணம் இருப்பதாக சொல்லப்படவில்லை என்றால் சரி தான். வாய்மொழியாக பாத்தியப்பட்டது என்று கூறி உள்ளீர்கள் என்றால் சரி தான். சிராஜுதீன் பெயரில் பட்டா எதுவும் ஏற்படவில்லை என்றால் சரி தான். வாய்மொழி பாகம் என்பது நாகூர் மைதீன் உயிரோடு இருக்கும் சமயம் ஏற்பட்டதா அல்லது அவர் இறந்த பின்பு ஏற்பட்டதா என்று தெரியுமா என்றால் இறந்த பின்பு ஏற்பட்டதாக என் தாயார் கூறினார்.

6) வாய்மொழி பாகம் யார் யாருக்கு இடையே ஏற்பட்டது என்றும் யார் யார் முன்னிலையில் ஏற்பட்டது என்றும் சொல்ல முடியாது என்றால் சரி தான். வாய் மொழி பாகம் எந்த வருடம், மாதம், தேதி ஏற்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் 1987 ம் ஆண்டுக்கு முன்பு 15 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்டதாக என் தாயார் கூறினார். உங்கள் தாயாருக்கு நாகூர் மைதீன் உறவினரா என்றால் என் தாயாரின் தாத்தா ஆவார். நாகூர் மைதீன் குடும்பம் கேரளாவில் வசித்தது கிடையாது என்றால் எனக்கு தெரியாது.

7) நாகூர் மைதீனுக்கு கேரளாவில் சொத்து இருப்பதாக கூறுகிறீர்கள் அது எந்த கிராமத்தில் எந்த சர்வே எண்ணில் எவ்வளவு இடம் இருக்கிறது என்று தெரியுமா என்றால் பாறசாலை, நெய்யாற்றங்கரை தாலுகா சர்வே எண் தெரியாது. அந்த சொத்து

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.09 19:40:11 +0530

சம்மந்தமாக நாகூர் மைதீன் பெயரிலோ சிராஜுதீன் பெயரிலோ பட்டா எதுவும் பார்த்தீர்களா என்றால் பார்க்கவில்லை. அது போல் கிரைய ஆவணம் எதுவும் பார்க்கவில்லை என்றால் சரி தான். அந்த சொத்து நாகூர் மைதீன் பெயரிலோ சிராஜுதீன் பெயரிலோ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான்.

8) நாகூர் மைதீன் குடும்பத்துக்கோ, சிராஜுதீன் என்பவருக்கோ பாறசாலை சார்பதிவாளர் அலுவலகத்துக்குட்பட்டு சொத்து எதுவும் கிடையாது என்றால் சரியல்ல, ஆவணம் உள்ளது. நாகூர் மைதீன் குடும்பத்துக்கோ, சிராஜுதீன் என்பவருக்கோ பாறசாலை சார்பதிவக அலுவலகத்துக்குட்பட்டு சொத்து உள்ளது என்பதை நிரூபணம் செய்ய தயாராக உள்ளீர்களா என்றால் இல்லை. நாகூர் மைதீன் குடும்பத்துக்கோ, சிராஜுதீன் என்பவருக்கோ அவ்வாறு ஒரு சொத்து கிடையாது என்றும் அது கற்பனையான சொத்து என்பதால் தான் நிரூபணம் செய்ய தயார் இல்லை என கூறுகிறீர்கள் என்றால் சரியல்ல.

9) சிராஜுதீன் என்பவருக்கு பாறசாலையில் சொத்து எதுவும் இல்லை என்பதால் மேற்படி சார்பதிவக அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட வா.சா.ஆ.1 பதிவு சட்டத்தின் படி செல்லக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ன் அசல் பத்திரம் யார் வசம் உள்ளது என்றால் என் வசம் உள்ளது. வா.சா.ஆ.1 பாறசாலை சார்பதிவக

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.09 19:40:18 +0530

அலுவலகத்தில் நகல் எடுத்தது என்றால் சரி தான். வா.சா.ஆ.1 ஆவணம் 25.07.1987 ல் பதிவு செய்யப்பட்டது என்றால் சரி தான்.

10) உங்கள் தகப்பனார் குறைவு முத்திரை கட்டணம் மற்றும் பதிவு கட்டணம் வள்ளியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் எப்போது செலுத்தப்பட்டது என்றால் 2019 ம் ஆண்டு செலுத்தப்பட்டது. அவ்வாறு 2019 ம் ஆண்டு வள்ளியூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் குறைவு முத்திரை கட்டணம் கட்டியதற்கு ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ல் கண்ட சொத்து விவரம் எதன் அடிப்படையில் எந்த ஆவணத்தின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டது என்று தெரியாது என்றால் சரி தான்.

11) வா.சா.ஆ.1 ஐ உங்கள் தகப்பனார் கிரையம் பெறும் போது காலிமனையாக கிரையம் பெறப்பட்டது என்றால் சரி தான். வா.சா.ஆ.1 ஆனது 1987 க்கு முன்பு மேற்படி சொத்து சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட ஆவணமோ பட்டாவோ இல்லை என்றால் சரியல்ல. உங்கள் தகப்பனார் மேற்படி காலிமனையில் எப்போது வீடு கட்டினார் என்றால் 2001 ம் ஆண்டு வீடு கட்டினார். அவ்வாறு வீடு கட்டுவதற்கு முன்பு ஆணைகுளம் பஞ்சாயத்தில் கட்டிடம் கட்ட அனுமதி மற்றும் அங்கீகார வரைபடம் பெற்றுள்ளாரா என்றால் பெற்றுள்ளார். அந்த வரைபடம், கட்டிட அனுமதியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.09 19:40:26 +0530

12) உங்கள் தகப்பனாருக்கு நத்தம் நிலவரித் திட்டத்தின் படி 1993 ம் ஆண்டு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. ஆனால் என் அம்மா ஜமீலா பீவி பெயரில் அடங்கல் பதிவேட்டில் பதிவு செய்துள்ளார்கள். பதிவு செய்து காலிமனை என காட்டி உள்ளார்கள். அது 1993 ம் ஆண்டே உங்கள் அம்மா பெயரில் கொடுத்து விட்டார்கள் என்றால் 1993 ல் பதிவு செய்துள்ளார்கள் ஆனால் எங்கள் கைவசம் ஆவணம் எதுவும் தரவில்லை. அவ்வாறு உங்கள் அம்மா பெயரில் நத்தம் பதிவேட்டில் பதிவு செய்த சர்வே எண். 736/29 என்றால் சரி தான். தற்போது நீங்கள் சர்வே எண். 736/29 க்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரி தான். பழைய சர்வே எண்ணையும் காட்டி உள்ளேன்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.09 19:40:32 +0530